Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை: ரூபா 5-00

பொது நூலகம் ... 17-5-1993


# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 04 | திருவள்ளுவர் ஆண்டு 2024 | வைகாசி 04 | [17-05-93] | திங்கட்கிழமை | ஓசை 68


## யாழ். மாவட்ட வைத்தியசாலையில் 96720 பேர் விடுதியில் தங்கி சிகிச்சை

யாழ். மாவட்டத்தில் கடந்த ஆண்டில் 96720 நோயாளர் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெற்றனர் என வைத்தியசாலை வட்டாரங்கள் வெளியீட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அனுமதிக்கப்பட்டவர்களில் 1240 பேர் மரணமடைந்துள்ளனர். மற்றும் 10 ஆயிரத்து 62 பேர் மகப்பேற்றுக்காகவும், 6078 பேர் காயங்களுக்குச் சிசிச்சை பெறுவதற்காகவும் சிகிச்சை பெற்றுள்ளனர். ஆஸ்மா நோயினால் 5780 பேரும், அறிகுறிகள் காணப்படாத நோய்களினால் 4507 பேரும், சரும இழைய நோயின் காரணமாக 3933 பேரும், மலேரியாவினால் 3367 பேரும், எலும்பு முறிவினால் 3367 பேரும், நுரையீரல் தொடர்பான நோய்களினால் 2776 பேரும், குடல் வருத்தத்தினால் 2724 பேரும் சிகிச்சைக்காக (4ஆம் பக்கம் பார்க்க)

# நிபந்தனையற்ற பேச்சிற்கு புலிகள் எப்பொழுதும் தயார்!

## பி.பி.ஸிக்கு திலகர் தெரிவிப்பு

(லண்டன்)

“தமிழீழ விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு எப்பொழுதும் தயாராகவே உள்ளனர். நிபந்தனையற்ற பேச்சிற்கு அவர்கள் எப்பொழுதுமே தயார். ஆனால், பேச்சுவார்த்தை ஒழுங்காக நடைபெற வேண்டுமானால்- அது வெற்றிபெற வேண்டுமானால், அதற்குரிய உகந்த சூழல் உருவாக்கப்பட வேண்டும்” இவ்வாறு பாரீஸிலிருந்து விடுதலைப் புலிகளின் இயக்கத்தைச் சேர்ந்த லோறன்ஸ் திலகர் பி. பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

திலகர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது.

மக்கள் மீது தொடுத்துள்ள போரை அரசாங்கம் நிறுத்தி-யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்தால்தான்-உணவுத் தடைகளை நிறுத்தி தென்தமிழீழப் பகுதிகளில் மக்கள் காணாமற் போவதை நிறுத்தி-உணவுத் தடைகளை நிறுத்தி-இப்படியாக ஓர் உகந்த சூழல் உருவாக்கப்பட்டால் தான் அந்த அடிப்படையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தான் வெற்றி பெறும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் என்றார்

வடக்கு கிழக்கு பகுதியில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்துவதை முன்பு நீங்கள் எதிர்த்து வந்ததாகக் கூறப்பட்டது. இப்போது நீங்கள் அதை ஏற்க முன்வந்திருப்பது பற்றி என்ன கூறுகின்றீர்கள் என பி. பி. ஸி. செய்தியாளர் கேட்டதற்கு.

மக்களுடைய கருத்தை ஜனநாயக ரீதியாக இது வெளிப்படுத்தும் என நான் கருதுகிறேன். நாற்பது வருட கால இன ஒடுக்குமுறையின் விளைவாக மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதை அறிவதற்கு வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் முழுமையான தமிழர் தாயகப் பகுதியில் கருத்துக் கணிப்பை வைத்தல் நலம் என நான் கருதுகிறேன் எனப் பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே பேச்சுக்களில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி விஜயதுங்க கூறியுள்ளாரே, இதற்குப் புலிகள் ஒப்புக்கொள்வார்களா? எனக் கேட்டபோது

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் மத்தியகுழு யார் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வது என்ற முடிவை எடுக்கும் எனத் தெரிவித்தார்

நாளை மாகாண சபைத் தேர்தல்கள் நடக்க இருக்கும் சமயத்தில் நீங்கள் சமாதானச் சைகையை விடுத்திருப்பதற்கு என்ன காரணம் என வினவியதற்கு

[4ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் முறைகேடுகள் செய்தி அமைப்பால் அம்பலம்

### தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்தின் போது நாட்டிலுள்ள செய்தி அமைப்புக்கள் முறைகேடுகளை உடனுக்குடன் அம்பலமாக்கியதாகத் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா கூறியுள்ளார். பி.பி.ஸி நிறுவனத்திற்கு வழங்கிய பேட்டியில் அவர் மேலும் கூறுகையில்;

லலித் அத்துலத்முதலியும், பிரேமதாசாவும் கொலைசெய்யப்பட்டமை தேர்தலின்போது வன்முறைவெடிக்கலாம் என்ற அச்சத்தையே ஏற்படுத்தியது. ஆனால் இந்தக் கொலைகள் நடந்த பின்பும் பொலிசார் இதுவரை 500 முறைப்பாடுகளைப் பதிவுசெய்துள்ள போதும் பொதுவாக அமைதி நிலவுகின்றது.

அரசியல் கட்சிகளையும், அவற்றின் ஆதரவாளர்களையும் உன்னிப்பாகக் கவனித்து வந்த செய்தி அமைப்புக்களே இந்த நிலைக்கு முக்கிய காரணம் என்றும் தெரிவித்தார்.

நாட்டில் நடந்த குழப்பங்களையும், தேர்தல் முறைகேடுகளையும் செய்தி அமைப்புக்கள் உடனுக்குடன் அம்பலப்படுத்தியதாகவும், பொலிசார் (4 ஆம் பக்கம் பார்க்க)

# கதவுகள் திறந்தே உள்ளன புலிகள் பேச வரவேண்டும்

## ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் தமது அபிலாசைகளுக்குநெருக்கமான ஓர் அரசியல் தீர்வை விரும்பினால் அவர்கள் பேச்சுவார்த்தை நட...

இதுகுறித்து ஆராய அரசு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கலாம். செயலாற்று ஜனாதிபதிமுறை குறித்துத் ...

...த்தை என் வசம் வைத்திருக்க நான் விரும்பவில்லை. மிதவாதபோக்கிலேயே நம்பிக்கை கொண்டுள்ளேன். ஜனாதிபதி ...

## இலவச உணவு விநியோகம்; வியாழனுக்குள் வழங்குக

### திட்டப் பணிப்பாளர் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சித்திரை மாத முதல் இரு வாரங்களுக்கான இலவச உலர் உணவு விநியோகத்தை எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு முன் வழங்கி முடிக்குமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் சகல பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக புனர்வாழ்வுப்பகுதி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் அனுப்பப்பட்ட சுற்று நிருபத்திற்கு அமைய தங்களுக்கு விநியோகிக்கப்பட்ட முத்திரைகள் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்கனவே விநியோகிக்கப்பட்டு விட்டது என நம்புகிறேன். இதற்கு அமைய 1993 சித்திரை மாத முதல் இரு வாரத்திற்கான உலர் உணவுப் பொருள்கள் ப. நோ. கூ. சங்கங்களுக்கு களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்டு விட்டன.

1993 சித்திரை மாதத்தின் இறுதி இரு வாரத்திற்கான (4 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ தேசத்துரோகி புலிகளால் சுட்டுக்கொலை

அம்பிலாந்துறை அம்பலத்தடி சிறிலங்கா இராணுவ முகாமிற்கு சமீபமாக வைத்து விடுதலைப் புலிகளால் ரெலோ தேசத்துரோகி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மேற்படி முகாமிலிருந்து 500 யார் தொலைவில் வைத்து கடந்த 11ஆம் திகதி விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர் கல்முனையைச் சேர்ந்த பிரதாப் எனவும் இவர் முன்னர் ஈ. பி. ஆர். எல். எவ் இல் செயற்பட்டவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## எறிகணை வீச்சில் ஒருவர் காயம்

(தொல்புரம்)

காரைநகர் கரையோரப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்றுமாலை 5 மணியளவில் பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சரமாரியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது. இதனால் அச்சமுற்ற மீனவர்கள் தொழில்களைக் கைவிட் (4ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குகளா? வேட்டுகளா? இன்று தீர்மானிக்கப்படும்

### - காமினி தெரிவிப்பு

[கொழும்பு]

எதிர்கால இலங்கையின் ஆட்சி வாக்குகள் மூலம் அமைய வேண்டுமா? அல்லது வேட்டுக்கள் மூலம் அமைய வேண்டுமா என்பதை இன்றைய தேர்தல் நிர்ணயிக்கும் என காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொலைகள் மூலம் நாட்டு மக்களின் தீர்மானம் பூரணமாக திசை திருப்பப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேர்தல் முடிவுகள் குறித்து மக்கள் (4ஆம் பக்கம் பார்க்க)

## ஏறிகணை வீச்சில் ஒருவர் காயம்

(தொல்புரம்)

காரைநகர் கரையோரப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் தமது காவல் நிலைகளிலிருந்து நேற்றுமாலை 5 மணியளவில் பொன்னாலை கடற்பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது சரமாரியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் சுமார் அரை மணி நேரம் நடைபெற்றது. இதனால் அச்சமுற்ற மீனவர்கள் தொழில்களைக் கைவிட்

(4ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குகளா? வேட்டுகளா? இன்று தீர்மானிக்கப்படும்

- காமினி தெரிவிப்பு

[கொழும்பு]

எதிர்கால இலங்கையின் ஆட்சி வாக்குகள் மூலம் அமைய வேண்டுமா? அல்லது வேட்டுக்கள் மூலம் அமைய வேண்டுமா என்பதை இன்றைய தேர்தல் நிர்ணயிக்கும் என காமினி திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கொலைகள் மூலம் நாட்டு மக்களின் தீர்மானம் பூரணமாக திசை திருப்பப்பட்டுள்ளது. எனவே இன்றைய தேர்தல் முடிவுகள் குறித்து மக்கள்

(4ஆம் பக்கம் பார்க்க)

மேலும் தெரிவித்திருப்பதாவது.

மக்கள் மீது தொடுத்துள்ள போரை அரசாங்கம் நிறுத்தி-யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வந்தால்தான்-உணவுத் தடைகளை நிறுத்தி தென்தமிழீழப் பகுதிகளில் மக்கள் காணாமற் போவதை நிறுத்தி-உணவுத் தடைகளை நிறுத்தி-இப்படியாக ஓர் உகந்த சூழல் உருவாக்கப்பட்டால் தான் அந்த அடிப்படையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் தான் வெற்றி பெறும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம் என்றார்

வடக்கு கிழக்கு பகுதியில் மக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு நடத்துவதை முன்பு நீங்கள் எதிர்த்து வந்ததாகக் கூறப்பட்டது. இப்போது நீங்கள் அதை ஏற்க முன்வந்திருப்பது பற்றி என்ன கூறுகின்றீர்கள் என பி. பி. ஸி. செய்தி

மக்களுடைய கருத்தை ஜனநாயக ரீதியாக இது வெளிப்படுத்தும் என நான் கருதுகிறேன். நாற்பது வருடகால இன ஒடுக்குமுறையின் விளைவாக மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதை அறிவதற்கு வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் முழுமையான தமிழர் தாயகப் பகுதியில் கருத்துக் கணிப்பை வைத்தல் நலம் என நான் கருதுகிறேன் எனப் பதிலளித்தார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனே பேச்சுக்களில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும் என்று ஜனாதிபதி விஜயதுங்க கூறியுள்ளாரே, இதற்குப் புலிகள் ஒப்புக்கொள்வார்களா? எனக் கேட்டபோது

பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கும் கட்டத்தில் விடுதலைப் புலிகளின் மத்தியகுழு யார் பேச்சுவார்த்தைகளில் கலந்து எடுக்கும் எனத் தெரிவித்தார்

நாளை மாகாண சபைத் தேர்தல்கள் நடக்க இருக்கும் சமயத்தில் நீங்கள் சமாதானச் சைகையை விடுத்திருப்பதற்கு என்ன காரணம் என வினவியதற்கு

[4 ஆம் பக்கம் பார்க்க)

யில் அவர் மேலும் கூறுகையில்;

லலித் அத்துலத்முதலியும், பிரேமதாசாவும் கொலைசெய்யப்பட்டமை தேர்தலின்போது வன்முறைவெடிக்கலாம் என்ற அச்சத்தையே ஏற்படுத்தியது. ஆனால் இந்தக் கொலைகள் இந்த நிலைக்கு முக்கிய காரணம் என்றும் தெரிவித்தார்.

நாட்டில் நடந்த குழப்பங்களையும், தேர்தல் முறைகேடுகளையும் செய்தி அமைப்புக்கள் உடனுக்குடன் அம்பலப் படுத்தியதாகவும், பொலிசார்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கதவுகள் திறந்தே உள்ளன புலிகள் பேச வரவேண்டும்

## ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க கோரிக்கை

(கொழும்பு)

விடுதலைப்புலிகள்தமது அபிலாசைகளுக்குநெருக்கமான ஓர் அரசியல் தீர்வை விரும்பினால் அவர்கள் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவேண்டும். எமது கதவுகள்என்றுமேதிறந்துவிடப் பட்டுள்ளன. நாம் பேச்சுக்களையேவிரும்புகின்றோம் என ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தெரிவித்துள்ளார்.

எமது நாட்டில் இனமோதல் இல்லை. பயங்கரவாதப் பிரச்சினையே இதுவாகும் எனக் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி விஜயதுங்க, பிரபாகரன் மறைந்திருக்கின்றார். அந்த வகையில் ஜனநாயகத்தைச் செயற்படுத்தமுடியாதுஅல்லது வேறு மூன்றாம் தரப்புகளூடாக இதைச்செய்யமுடியாது என்றார். விடுதலைப் புலிகள் சிபார்சுகளை முன்வைத்துப் பேச முன்வரவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அமைப்புமுறை குறித்து கருத்துத் தெரிவித்த டி.பி.விஜயதுங்க, ஜனாதிபதி அமைப்புமுறை குறித்து சர்வசனவாக்கெடுப்பு நடத்தலாம்.

இதுகுறித்து ஆராய அரசு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்கலாம். செயலாற்று ஜனாதிபதிமுறை குறித்துத் திறந்தமனதுடன் உள்ளேன். முற்றுமுழு அதிகாரத்தை என் வசம் வைத்திருக்க நான் விரும்பவில்லை. மிதவாதபோக்கிலேயே நம்பிக்கை கொண்டுள்ளேன். ஜனாதிபதி முறையைச் சிலர் எதிர்க்கின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பலத்த பாதுகாப்பின் மத்தியில் இன்று மாகாணசபைத் தேர்தல்

## 7 மாகாணங்களில் வாக்களிப்பு

[கொழும்பு]

சிறிலங்காவில் இன்று ஏழு மாகாணங்களுக்கான மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. இதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா தெரிவித்துள்ளார். தேர்தல் பாதுகாப்பிற்கென 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட பொலிசாரும், இராணுவத்தினரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்று காலை 7. 00 மணி முதல் மாலை 4. 00 மணிவரை வாக்குப் பதிவுகள் இடம்பெறவுள்ளன. தேர்தல் முடிவுகள் நாளை அதிகாலை 2 30 மணியளவில் வெளிவர ஆரம்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது மாகாண சபைத் தேர்தல் இன்று ஏழு மாகாண சபைகளுக்கு நடைபெறவுள்ளது. 8191 வாக்குச் சாவடிகள் இத்தேர்தலுக்கு என அமைக்கப்பட்டுள்ளன. 7 மாகாணங்களிலும் மொத்தம் 2351 வேட்பாளர்கள் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின்எண்ணிக்கை 93, 01356 ஆகும். விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் இத்தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

இத்தேர்தலில் வாக்காளர்கள் தாம்விரும்பிய கட்சிக்கோ அல்லது சுயேட்சைக் குழுவிற்கோ வாக்களிப்பதுடன், அக்கட்சியைச்சேர்ந்த அல்லது குழுவைச்சேர்ந்த மூன்று வேட்பாளர்களுக்குத் தமது வாக்குகளை அளிக்கமுடியும்.

வாக்களிப்புத் தொடர்பான சகல ஒழுங்குகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் வாக்களிப்பு மாலை 4 மணிக்கு முடிவடையும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் 50,000 படையினர் கடமையில்

[கொழும்பு]

மாகாண சபை தேர்தலை முன்னிட்டு கொழும்பில்பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மாகாணசபை தேர்தலுக்காக சுமார் 50,000 பொலிசார் ராணுவத்தினர் விசேடமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் இவர்கள் வாக்களிப்பு நிலையங்களிலும், தேர்தல் கடமையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களையும்வாக்காளர்களையுமபாதுகாப்பார்கள்என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தேர்தல் வன்முறைகளில் ஈடுபடுபவர்கள் அச்சுறுத்துபவர்கள் உடனடியாக கைதுசெய்யப்படவேண்டும் என சகலருக்கும் அறிவுறுத்தல் இடப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## ஜனாதிபதியின் பாதுகாப்பு ரவி ஜெயவர்த்தனாவிடம்

(கொழும்பு)

புதிய சிறிலங்கா ஜனாதிபதியின் பாதுகாப்பு, ரவி ஜெயவர்த்தனாவின் தலைமையிலான விசேட அதிரடிப்பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

முன்னர் ஜனாதிபதியின் பாதுகாப்பிற்கென நியமிக்கப்பட்டிருந்த விசேட பொலிஸ் பாதுகாப்பு தற்பொழுதுவிலக்கிக் கொள்ளப்பட்டே ரவி ஜெயவர்த்தனா தலைமையி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசா வீட்டில் 30 கோடி ரூபா மீட்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சொந்த வீடாகிய சிறீசுசரித்த இல்லத்திலிருந்து 30 கோடி ரூபா பணமாக மீட்கப்பட்டுள்ளதாக வினிஎதிகொட தெரிவித்துள்ளார். இது குறித்து பலத்த சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பிரேமதாசாவின் கொலை தொடர்பாக விசாரணையை மேற்கொண்டு வரும் இரகசியப்பொலிசாரே இப்பணத்தை அங்கிருந்து மீட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கொலை விசாரணை

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரு வாரங்களில் ஹேமா எம். பியாக நியமனம் பெறுவார்?

### அமைச்சர் பதவியும் கிட்டலாம்

(கொழும்பு)

அடுத்த இருவாரங்களில் திருமதி ஹேமா பிரேமதாசா தேசியபட்டியல் எம். பியாக நியமிக்கப்படலாம் என ஐ. தே. கவிற்கு நெருங்கிய வட்டாரங்கள் குறிப்பிட்டன.

ஹேமா பாராளுமன்றத்திற்குள் வருவதற்கு வசதியாக தேசிய பட்டியல் எம். பி. ஒருவர் ஏற்கனவே ராஜினாமா செய்ய தாமாக முன்வந்துள்ளாராம். இந்த எம். பி. கலா சாரதுறையுடன் நெருங்கிய சம்பந்தப்பட்டவர் எனக் கூறப்படுகிறது.

திருமதி ஹேமாவிற்கு பெண்கள் சேமநல நடவடிக்கைகள் தொடர்பானஅமைச்சு வழங்கப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இதேவேளை லலித்தின் மனைவி ஸ்ரீமானியும் அரசியலில் பிரவேசிக்க முயற்சிகள் எடுத்துள்ளார் என்பதும் தெரிந்ததே.

## மீட்புநிதி சேகரிப்பு

எதிர்வரும் புதன்கிழமை அன்றுநல்லூர்மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் மாலை 3-00 மணி தொடக்கம் 4-00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதுவரை காலமும் மீட்புநிதிக் கடனைச் செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாளில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## பொறிவெடியில் காலை இழந்தார்

(யாழ்ப்பாணம்)

பெரியவிளான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரினால் புதைத்துவைக்கப்பட்டு இருந்த பொறிவெடியில் சிக்கி இளம் பெண் ஒருவர் தனது வலது காலை இழந்துள்ளார்.

செல்வி மேரி ஜசிந்தா அல்போன்ஸ் (23 வயது, பெரியவிளான்), (தற்போது மானிப்பாய் கிழக்கு சுதுமலையில் வசித்து வருபவர்) என்ற இளம் பெண்ணே தனது காலை இழந்தவராவார்.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது மேற்படி பெண் தாயுடன் நேற்றுக்காலை சுமார் 11. 00 மணியளவில் பெரியவிளான் பகுதியில் அமைந்துள்ள தனது சொந்த வீட்டை பார்க்கச் சென்ற சமயமே அங்கு புதைத்து வைக்கப்பட்டிருந்த வெடி வெடித்ததாக தெரியவருகின்றது.

## பாஸ்கரலிங்கத்தின் பதவி பறிபோகும்?

(கொழும்பு)

கொள்கை திட்டமிடல் நிதி அமைச்சின் செயலாளர் திரு.பாஸ்கரலிங்கத்தின் பதவி பறிபோகலாம் என கொழும்பிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. புதிய ஜனாதிபதி மேற்கொள்ளும் மாற்றங்களின் அடிப்படையிலேயே இது இடம்பெறலாம் எனவும் அறியவருகின்றது. திரு.பாஸ்கரலிங்கம் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் மிகவும் நம்பிக்கைக்குப்பாத்திரமானவர் என்பது தெரிந்ததே.

(4ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின் அமைச்சரவை மாற்றம்

(கொழும்பு)

மாகாணசபை தேர்தலின் பின்னர் மந்திரிசபையில் பல மாற்றங்கள் ஏற்படலாம் என லக்திவ ஆசிரியர் வினிஎதிகொட ஊகம் தெரிவித்துள்ளார். இம்மந்திரிசபைமாற்றத்தின் போது பிரேமதாசாவின் ஆதரவாளர்கள் அகற்றப்படுவார்கள்என்றும் டி. பி. விஜயதுங்காவின் பலம் ஆதரவாளர்கள் நியமிக்கப்படுவதன் மூலம் மந்திரி சபையில் அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும்: கம் உதாவ கொண்டாட்டங்களிற்கு செலவிட்ட பணத்தை மிச்சப்படுத்தியிருந்தால் இப்போதுதான் வழங்கி

[4ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ். மற்றும் சுபமங்களா, குன்றின் குரல், விருட்சம், சலனம், செம்மலர் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விபரங்கட்கு: வசந்தம் புத்தக நிலையம், 405, அருச்சுனா வீதி, (புதிய பஸ் நிலையம் முன்) யாழ்ப்பாணம். (4871)

### வியாபாரிகட்கு

லேஸ், நூல் வகைகள் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள - ஜெயா அழகு சாதனமாளிகை 177A, மின நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-6613)

### உதிரிப்பாகங்களுக்காக சகல மணிக்கூடுகள் றேடியோக்கள்

நல்ல நிலையில் உள்ள எலக்ரோனிக், ஓட்டோமெற்றிக், வைண்டிங் சுவர், மேசை மணிக்கூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 284, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-6633)

### முன்னோடி நூல்கள்

அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின் 'கெட்டிக்காரர்கள்' ''முதலாம் பிள்ளை'' ரூ 30/- நூல்கள் முறையே இலங்கை வானொலி தமிழ்ச்சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகளாகும். இந்த 19 நாடகங்களையும் பலரும் மேடையில் நடித்து விட்டனர். (4799)

### எம். ஜி. ஆர். திருமண சேவை

பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் நிறைய உண்டு. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். வே. புண்ணியமூர்த்தி. அனுமதி இல. 2518 புத்தூர்ச்சந்தி, மீசாலை கிளை: ஜொலி ஹேக்கவுஸ், முகமாலை, எழுதுமட்டுவாள். எம் ஜி ஆர். வீடியோ கிளப் வல்வெட்டித்துறை. (3399)

## நன்றிகள்



வண பிதா ஆபரணம் சிங்கராயர் (அ ம.தி) அவர்களின் மரணச்சடங்கில் கலந்து கொண்ட மேதகு யாழ். ஆயர், யாழ் மாவட்ட குருமுதல்வர், அருட்தந்தையர்கள் அருட் சகோதரிகள் அருட் சகோதரர்கள். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மற்றும உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அத்துடன் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்திய தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ காவற்றுறையினர் அனைவருக்கும் எமது இதயத்திலிருந்து ஆழ்ந்த நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.


நாளை 18-05-1993 (செவ்வாய்க்கிழமை) மாலை 4 30 மணிக்கு அன்னாரின் ஆன்ம சாந்திக்காக நாவற்குழி புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

ஞானப்பிரகாசம் குடும்பத்தினர்,
(மூத்தண்ணன்)

புனிதஅந்தோனியார் கோவிலடி,
நாவற்குழி.
(4894)

## 7-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

வீரப் பிறப்பு
08 — 05 — 1967



மாவீரனாகிய நாள்
17 — 05 — 1986

### வீரவேங்கை அலெக்ஸ்

(அரிகரன் நாகலிங்கம்)

ஆண்டு ஏழு மெல்ல நடந்தது
ஈண்டு நாமும் நின் நினைவாய்
வாழ்ந்து நிற்கிறோம்
மாண்பு தமிழ் ஈழம் பிறக்க

## மேலதிக ஆசிரியர் விபரம் அனுப்பிவைக்கக் கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் பற்றிய விபரங்களை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறு யாழ் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் சகல கோட்டங்களுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிக்கல்விப் பணிப்பாளர்களையும் பணித்துள்ளார்.

மாணவர் தொகைக்கு மேலாக உள்ள ஆசிரியர்கள் தொகையைப் பாடசாலையில் உள்ள மாணவர் தொகைக்கு ஏற்பவும், உயர் வகுப்புக்களில் உள்ள மாணவர் தொகைக்கு ஏற்ப ஆசிரியர்களைச் சரியாகக் கணக்கிட்டு மேலதிகமாக உள்ள ஆசிரியர்கள் தொகையை உடன் தமக்கு அனுப்பிவைக்குமாறு இவர் பணித்துள்ளார். (17)

### குழாய்க்கிணறு அமைப்பு

[தொல்புரம்]

யாழ் தேசிய சர்வோதயத்தினரின் நன்கொடைப்பண உதவியுடன் சித்தன்கேணி, தொல்புரம் ஆகிய இடங்களில் குழாய்க்கிணறுகள் இரண்டு அமைக்கப்பட்டுள்ளன.

மேற்படி குழாய்க் கிணறுகள் தொல்புரம் அ.மி த.க பாடசாலையிலும் சித்தன் கேணி கலைவாணி சனசமூக நிலையத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் இக்குழாய்க்கிணறுகள் அமைத்ததின் பயனாக சித்தன்கேணியில் சுமார் 400 மக்களும், தொல்புரத்தில் சுமார் 200 மாணவ மாணவியரும் குடிநீர் வசதியைப் பெற்றுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது. [41]

### சேவை நேரம் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை கடந்தமாதம் தொடக்கம் 24 மணித்தியால சேவையை பொது மக்களின் நன்மை கருதி ஆரம்பித்துள்ளது.

நோயாளர்கள் இரவு நேரங்களில் வைத்திய சாலைகளில் தங்கியிருந்து மருத்துவ வசதிகள் பெறக்கூடிய வகையில் பணிப்பாளர் சபை ஏற்ற நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இங்குவரும்நோயாளர்களின் நன்மை கருதி இவ் வைத்தியசாலை முன்பாக இருந்து அண்மையில் பேரூந்து சேவையும் இடம் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (24)


BECON

பாரதிதாசன்

கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம்.

O/L DAY CLASS-1993

ஆரம்பம்: 18-05-93 8-00 a. m.

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — இரா. அருட்செல்வம்—சதீஸ்
சமூகக் கல்வி — கே. எஸ். முத்துலிங்கம்
தமிழ் — கோப்பாய் சிவம்
ஆங்கிலம் — P. தவராஜா
வர்த்தகம் — T. ராஜன்
சமயம் — K. நாகேஸ்வரன்

வாரத்தில் நான்கு வகுப்புகள் நடைபெறும்.

(சி 6636)

400 ml - யானைச் சோடா


யாழ். கல்வித்திணைக்கள

## அதிகாரிகள் கொழும்பில் பணிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித் திணைக்களத்தைச் சேர்ந்த இரு கல்வி அதிகாரிகள் இரண்டு மாதங்களுக்கு மேலாகக் கொழும்பில் தங்கிநிற்பதால் கல்வித் திணைக்கள வேலைகள் சிலவற்றில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பொதுநிர்வாகப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், கல்வி அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளருமே கொழும்பில் நிற்பதாகக் கூறப்படுகிறது.

## கொழும்பு ஹோட்டல் 124 கோடிக்கு விற்பனை

[கொழும்பு]

கொழும்பின் பிரபலஹோட்டலான கொழும்பு ரினய்சன்ஸ் ஹோட்டல் 124 கோடி ரூபா விற்த விற்கப்பட்டுள்ளது. ஹோட்டலை வாங்க சில பலதேசியநிறுவனங்களிடையே தீவிர போட்டி நிலவியது.

ஹோட்டல் விற்பனைக்கு விடப்பட்டபோது ஆரம்ப விலை கோரலாக 854, 106, 750 ரூபாவாக இருந்தது. முன்னணி வர்த்தக நிறுவனங்களாக சிங்கப்பூர் டெவலப் மன்ற் பாங், ஆசியா ஸ்டொக் புரோக்கர் நிறுவனம் ஆகியன போட்டியில் ஈடுபட்டதையடுத்து விலையில் அதிகரிப்பு ஏற்பட்டது.

இறுதியில் ஆசியா ஸ்டொக் புரோக்கர் நிறுவனத்தால் ஹோட்டல் 124 கோடிக்கு வாங்கப்பட்டது.

### நாடகக் கருத்தரங்கு

''நாடகம் ஒரு கல்வி முறைமையாக'' எனும் தலைப்பிலான நாடகக் கருத்தரங்கு ஒன்று கைலாசபதி கலையரங்கில் எதிர்வரும் 28-ம், 29-ம் திகதிகளில் யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரால் நடாத்தப்படவுள்ளது. பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் திருவாளர்கள் குழந்தை ம. சண்முகலிங்கம், சிதம்பரநாதன், நா. சுந்தரலிங்கம், சோ. பத்மநாதன், கந்தையா சிறிகணேசன் திருமதி கோகிலா மகேந்திரன், கலாநிதிகள் சுரேஷ் கனகராசா, காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கருத்துரையாற்றவுள்ளனர்.

### தச்சுத் தொழிலாளர் சங்கம் உதயம்

யாழ். மாவட்டத் தச்சுத் தொழிலாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 9-05-93 அன்று காலை 10 00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டத் தொழிற் சங்கத் தலைவர் திரு. இமயவன் அவர்கள்கலந்துகொண்ட இக்கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாக சபை ஒன்று தெரிவு செய்யப்பட்டது இதில் தலைவர் திரு ந. வடிவேலு-நாரந்தனை, செயலாளர் திரு. சி. கனகலிங்கம் - கோண்டாவில், பொருளாளர் திரு. கா. க. சந்திரன் - ஆனைக்கோட்டை மற்றும் உப தலைவர், உப செயலாளர் உட்பட ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யபபட்டனர். [90]

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-17

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ பத்மன் (ம. பரமேஸ்வரன் - நற்பிட்டிமுனை, கல்முனை-அம்பாறை)

நற்பிட்டி முனையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு தம்பட்டையில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

★ முரளி (-த. முரளிதரன் - நற்பிட்டிமுனை-கல்முனை-அம்பாறை)

1986ஆம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில்வீரச்சாவெய்திய,

கூட்டி (கனகசபை கிருபாகரன்-கூட்டி வீதி, மாசார்-பளை)

வானொலி தமிழ்ச்சேவைத் தனி நாடகங்களின் முதலாம் இரண்டாம் தொகுதிகளாகும். இந்த 19 நாடகங்களையும் பலரும் மேடையில் நடித்து விட்டனர். (4799)

---


எம். ஜி. ஆர்.
திருமண சேவை

பொருத்தமான மணமகன், மணமகள் எம்மிடம் நிறைய உண்டு. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும். வே. புண்ணியமூர்த்தி. அனுமதி இல. 2518 புத்தூர்ச்சந்தி, மீசாலை கிளை: ஜொலி ஹேக்கவுஸ், முகமாலை, எழுதுமடடுவாள். எம் ஜி ஆர். வீடியோ கிளப் வல்வெட்டித்துறை. (3399)


---

UNIVERSITY OF JAFFNA
TENDER NOTICE

Tenders are invited for the following works from Contractors Registered for Civil Engineering works with University of Jaffna or ICTAD.

a) Improvements to partially completed exam hall - Phase II

b) Improvements to partially completed Maintenance Branch extension

Tender forms can be obtained from Works Engineer, University of Jaffna from 1993-05-18 to 1993-05-21 on producing receipt from Bursar, University of Jaffna for the payment of the following tenderfee for each tender.

a Refundable — Rs 2000/-

b) Non - Refundable — Rs 200/-

Tender forms can be inspected free of charge at Planning Branch, University of Jaffna during office hours.

Perfected tenders should be sent to reach Registrar, University of Jaffna not later than 1993 06-08 at 10.00 a m

Tender Board, University of Jaffna reserves the right to reject any tender

REGISTRAR,
University of Jaffna.
P. O. Box 57,
Thirunelvely,
Jaffna. (சி 6615)

---

08 — 05 — 1967



17 — 05 — 1986

## வீரவேங்கை அலெக்ஸ்
(அரிகரன் நாகலிங்கம்)

ஆண்டு ஏழு மெல்ல நடந்தது
ஈண்டு நாமும் நின் நினைவாய்
வாழ்ந்து நிற்கிறோம்
மாண்பு தமிழ் ஈழம் பிறக்க
யாண்டும் வேள்வி தான்
பூண்டு நீள நினைக்கும்.

அப்பா, அம்மா, தங்கை,
உற்றார், உறவினர்.

புங்குடுதீவு 11 (4891)

---

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் நன்றி நவிலலும்



ஜனனம்: 5-3-1929

அஸ்தமனம்: 17-4-1993

அமரர்
## லட்சுமி சுப்பிரமணியம்
(குரும்பசிட்டி)

வையகம்மீதுஎம்மைவளத்துடன் வாழவைத்த தெய்வமே
உம்மை நாங்கள் எப்படி மறப்பதம்மா
இத்தரைமீது இவ்வுடல் தாங்குமட்டும்
நித்தமும் உம்நினைவை நெஞ்சத்தில் சுமந்துநிற்போம்.

எமது அன்புத்தெய்வத்தின் பிரிவில் பல்வேறு வழிகளிலும் பங்கு கொண்டு எமக்கு ஆறுதல் அளித்த அனைவருக்கும் எம் நன்றிகள்.

இன்று (17-5-93) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அரச வீதி,
உரும்பராய் கிழக்கு,
உரும்பராய். (4892)

அன்பு பிள்ளைகள்,
அன்பு மருமக்கள்,
ஆசைப் பேரப்பிள்ளைகள்.

---

# O/L DAY CLASS-1993

ஆரம்பம்: 18-05-93 8-00 a. m.

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — இரா. அருட்செல்வம்—சதீஸ்
சமூகக் கல்வி — கே. எஸ். முத்துலிங்கம்
தமிழ் — கோப்பாய் சிவம்
ஆங்கிலம் — P. தவராஜா
வர்த்தகம் — T. ராஜன்
சமயம் — K. நாகேஸ்வரன்

வாரத்தில் நான்கு வகுப்புகள் நடைபெறும்.

(சி 6636)

---

400 ml - யானைச் சோடா
## போத்தல்கள் தேவை

400ml – யானைச் சோடாப்போத்தல்கள் தேவை
விற்பனைக்கு வைத்திருப்போர் விலை
விபரங்களுடன் தொடர்புகொள்ளவும்.

TASTE LINE INDUSTRIES (PVT) Ltd.
14, Seenior Lane, JAFFNA
(சி-6627)

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



மாதா மடியில்
27.9.1971

மண்ணின் மடியில்
17.05.1989

## வீரவேங்கை இன்சூர்
[நடராசா ஜெயகரன்]

இன்சூர் என்றவுடன் இன்முகத்தை காட்டிடுவாய்
இன்னல்கள் பல வந்த போதும் இன்முகத்தை
காட்டிடுவாய்
துன்பங்கள் பல வந்தும் உன் குடும்பத்தை
தூரத்திடவும் துணிந்து நின்றாய்
இன்னுயிரைத் துச்சமென்று இணைத்து நின்றாய்
விடுதலைப் புலியாய்
காட்டில் நீ இறந்ததனால் தமிழ் ஈழநாள்
ஏட்டில் பதித்து விட்டாய் உன் பெயரை எம்நெஞ்சில்
பாட்டாய் பதிந்துவிட்டாய் படித்திடுவோம்
உன்புகழை.

இன்சூர் வீதி,
கோண்டாவில் வடக்கு.

- குடும்பத்தினர்
(4870)

---

நிதிகள் சுரேஷ் கனகராசா, காரை செ சுந்தரம்பிள்ளை ஆகியோரும் கருத்துரையாற்றவுள்ளனர்.

மற்றும் உப தலைவர், உப செயலாளர் உட்பட ஒன்பது உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். [90]

---

## நினைவு கூருகின்றோம் ... 1993-05-17

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய-

★ பத்மன் (ம. பரமேஸ்வரன் - நற்பிட்டிமுனை, கல்முனை-அம்பாறை)

நற்பிட்டி முனையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டு தம்பட்டையில் வைத்துக் கொலை செய்யப்பட்ட

★ முரளி (-த. முரளிதரன் - நற்பிட்டிமுனை-கல்முனை-அம்பாறை)

1986ஆம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனானநேரடிச்சமரில்வீரச்சாவெய்திய,

சூட்டி (கனகசபை கிருபாகரன்-சூட்டி வீதி, மாசார்-பளை)

ஊர்காவற்றுறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

அலெக்கஸ்/அரி (நாகலிங்கம் அரிகரன்—11-ம் வட்டாரம், புங்குடுதீவு-யாழ்)

நிதி (தில்லையம்பலம் சிவசிகாமணி-4-ம் வட்டாரம், நயினாதீவு-யாழ்)

1988ஆம் ஆண்டு காரைதீவுப்பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான சமரின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

இராசாத் [...... காரைதீவு-03-அம்பாறை)

மல்லாவியில் வயலில் வேலை செய்து கொண்டிருந்த போது இந்தியப்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் காயமுற்று யாழ் மருத்துவமனையில் பலியான தமிழ் விவசாயி.

1989 ஆம் ஆண்டு யாழ்.கொக்குவில் செருக்கன் புலம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

இன்சூர் (நடராசா ஜெயகரன்-இன்சூர் வீதி, கோண்டாவில் வடக்கு-யாழ்)

இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பெண் மற்றும் அத்தியார் கல்லூரி உயர்தரவகுப்பு மாணவன்.

புன்னாலைக் கட்டுவனில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இளம் பெண் உட்பட 02 தமிழர்கள்

1991 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் மிதிவெடியில் சிக்கியதில் வீரச்சாவெய்திய,

லெப்.ரஞ்சன் (மு.சுபாஸ்கர்-நெடுங்கேணி-மணலாறு)

1992 ஆம் ஆண்டு மட்டு-குருமண் பகுதியில் தேச விரோதசக்திகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

அருள்மணி/பழனி [தங்கத்துரை பிறேமச்சந்திரன் பொத்துவில்-அம்பாறை]

மட்டு மயிலம்பாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

2-ம்லெப்.புஸ்பமாறன்/குணா [சின்னத்துரை சந்திரன்-வாழைச்சேனை-மட்டு]

லோகிதகுமார்/பிரபு [கந்தப்போடி மாணிக்கவாசகம் -மயிலம்பாவெளி-மட்டு]

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-6635)

சிந்தனைக்கு

ஒருவனிடம் அதிகாரத்தை கொடுத்தால், அவனின் இயல்பை அறிந்துகொள்ளலாம்.

— யூகோஸ்லேவிய பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 17-05-1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண்-05

## அதிகார நாற்காலி

சிறிலங்கா ஜனாதிபதி பதவி, ஒருவரை தமது எல்லைக்குள் சர்வவல்லமை படைத்த 'கடவுளாக' மாற்றுகின்றது. இதனை அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கிய முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா போன்றவர்கள் உறுதியான ஆட்சிக்கான அமைப்பு என்கின்றார்கள். அதனை எதிர்ப்பவர்கள் தனி மனித சர்வாதிகாரம் என்கின்றார்கள்.

ஆனால் கடந்த கால அனுபவங்கள் உறுதியான ஆட்சி என்பதைவிட, தனிமனித சர்வாதிகாரத்திற்கே வழிவகுத்துள்ளது போல் தெரிகின்றது. முன்னாள் ஜனாதிபதிகளான ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும், ரணசிங்க பிரேமதாசாவும் இப்பதவிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்திய விதம் இதனையே காட்டுவதென்றால், புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றுள்ள டிங்கிரி பண்டா விஜயதுங்காவின் நடவடிக்கையும் இதனை ஒத்துள்ளது போலவே உள்ளது.

புதிய ஜனாதிபதி பதவி ஏற்றபோது, கடந்த கால ஜனாதிபதிகள் போன்று பெருமளவிற்கு எதேச்சதிகாரமான போக்கு இருக்காது என்றும், எதிர்க்கட்சியினரையும் அனுசரித்துச் செல்லும் போக்கே இருக்கும் எனவும் பலரால் எதிர்வு கூறப்பட்டது. ஆனால், பதவி ஏற்று இருவாரங்களுக்குள் ஜனாதிபதியின் பேச்சும், நடவடிக்கைகளும் கட்சிக்குள்ளும், வெளியிலும் எதிர்பார்த்ததிற்கு மாறாக, அதிகாரப் பிரயோகம் கொண்டதாகவும், கடும் போக்காகவும் உள்ளதையே காணக்கூடியதாக உள்ளது.

பதவி ஏற்ற அன்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சேவையைப் புகழ்ந்து பாராட்டிய டி. பி. விஜயதுங்கா, இருவாரங்களுக்குள்ளாகவே ''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைப்போன்றே நானும் மக்கள் மத்தியில் செல்வேன். ஆனால், நான் பிரேமதாசா அல்ல. எனது கையில் என்றும் இரத்தக்கறை படிந்தது கிடையாது'' எனத் தெரிவித்துள்ளார். டி. பி. விஜயதுங்காவின் இக்கூற்றானது வெளியில் உள்ள பலரும் குறிப்பிடுவது போன்று பிரேமதாசாவின் ஆட்சி ஓர் இரத்தக் கறை படிந்த ஆட்சி என்பதை ஏற்றுக் கொள்வ

மாகாணசபை தேர்தல் களம்

### அதிகாரத்தில் இருப்போரும், வரத் துடிப்போரும்

# பேச்சு மூலம் தீர்ப்போம் என பழைய பாடலையே பாடுகின்றனர்

(கொழும்பு)

தமிழர் பிரச்சனை தொடர்பாக பல ஆண்டுகளாக பேசி ஆகிவிட்டது. இனிப்பேச ஒன்றும் கிடையாது. சுயநிர்ணய அடிப்படையில் மாநில சுயாட்சியைப் பிரகடனம் செய்வதே இன்றைய ஆட்சியின் கடமையாகும். அதிகாரத்தில் இருப்போரும் அதிகாரத்திற்கு வரத் துடிப்போரும் பேச்சு மூலம் தீர்ப்போம் என்ற பழைய பாடலைத்தான்பாடியவண்ணமுள்ளனர் என புதிய ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலர் இளஞ்செழியன் கூறினார்.

கொழும்பு மாவட்டத்தில் மக்கள் இயக்க சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அரச ஊழியர் சங்க மண்டபத்தில் நடந்த கூட்டத்தில் அவர் பேசுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். சிங்கள தேசியவாதத்தை கைவிடாத வரை ஐ.தே க.வினாலோ சுதந்திரக்கட்சியினாலோ தீர்வொன்றைக் கொண்டு வர முடியாது என அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த 45 வருட அனுபவங்கள் கூட பெரும் தேசியவாதிகளின் போக்கை மாற்ற முடியவில்லை என்றால் போராட்டம் ஓய்வது எப்படி? தமிழ்மக்களின் போராட்டம் நிறுத்தப் படுவது பிரச்சினையின் தீர்விலேயே தங்கியுள்ளது. மலையக மக்களைப்பொறுத்தவரையில் அவர்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிட்டதாக கூறுவது போலித்தனமானது; மக்களை ஏமாற்றுவது என்றும் அவர்தனது உரையில் குறிப்பிட்டார்.

## வாக்குப்பெட்டி செல்லும் வாகனங்களில் ஏறத்தடை

[கொழும்பு]

மாகாணசபை தேர்தலில் வாக்குச் சீட்டுகள் அடங்கிய வாக்குப் பெட்டிகளை ஏற்றிச் செல்லும் வாகனங்களில் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூடச் செல்ல அனுமதிக்குமாறு எதிரணியினர் விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் நிராகரித்து விட்டார்.

வாக்குப்பெட்டி எடுத்துச் செல்லும் வாகனங்களின் பின்னால் வேண்டுமெனின் கட்சிப் பிரதிநிதிகள் வேறு வாகனங்களில் செல்ல அனுமதிக்குமாறு தாம் பொலிஸ் மா அதிபரை கோரியிருப்பதாகவும் தேர்தல் ஆணையாளர் அப்போது தெரிவித்தார்.

இதேசமயம் வாக்களிப்பு நிலையங்களுக்கு எம். பிகளோ, அமைச்சர்களோ செல்லவும் தேர்தல் ஆணையாளரினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## கண்காணிப்பாளரிடம் மு. காங்கிரஸ் முறையீடு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு இலங்கை வந்துள்ள தேர்தல்கண்காணிப்பாளர்குழுவை ஹோட்டல் ஒபரோயில் சந்தித்து பேச்சு நடத்தியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்தது.

அரசின்கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் பத்திரிகை ஒன்றும் தனது கட்சி தொடர்பான செய்திகளை இருட்டடிப்பு செய்வதாகஅம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர்களின் அபிலாசைகளுக்கு ஏற்பவே இந்த பாரபட்சம் கடைப்பிடிக்கப்படுவதாக அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிமுறையை அழித்து அதன்பின் நியமனமாம்

சிறிமாவோ சொல்கிறார்

(கொழும்பு)

''நான் மரணம் அடையும் வரை இந்தப்பதவியில்ஒட்டிக் கொண்டிருக்கப் போவதில்லை எனினும் நிறைவேற்று ஜனா

பண்டாரநாயக்கா கண்டியில் நடந்த தேர்தல் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஏழு மாகாணசபைகளில்எதிரணியினர் 5 மாகாணசபைக

## இனங்களின் தனித்துவம் பாதுகாக்கப்படும்

ஜ.ஐ.தே.மு. அறிக்கை

(கொழும்பு)

சகலரையும் சிறிலங்கா பிரஜைகளாக கருதும் அதே வேளையில் சகல இனங்களினதும் தனித்துவத்தை பேணிப் பாதுகாக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி பாடுபடும் என ஜ ஐ தே மு.யின் கொள்கை விளக்க அறிக்கை கூறுகிறது.

நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழித்து மீண்டும் பாராளுமன்ற ஆட்சி முறையை கட்சி கொண்டு வரும். அவசர காலச்சட்டத்தை படிப்படியாக குறைத்து இறுதியில் அதனை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்,

வெளிநாடுகளுடன் குறிப்பாக அயல்நாடுகளுடன் நம் இறைமையை பாதிக்காத வகையில் நேச உறவுகளை பூணுவோம் என ஜ ஐ தே.மு. கொள்கை அறிக்கை கூறுகிறது

## உலகநாடுகள் முடிவுகளை எதிர்பார்த்திருக்கின்றன

அமைச்சர் மன்சூர் தெரிவிப்பு

[கொழும்பு]

உலகில் மதிக்கப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா மறைவுக்கு அனுதாபம் தெரிவித்த உலகநாடுகள் பல மாகாணத் தேர்தலில் இந்நாட்டு மக்கள் கொல்லப்பட்ட தலைவருக்கு காட்டும் அனுதாபத்தை எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு முஸ்லிம்கள் ஒரே அணியாக ஐ.தே.க.விற்கு வாக்களிக்க வேண்டும் என அமைச்சர் மன்சூர் கோரினார்.

குருநாகலில் நடந்த பிரசாரக் கூட்டத்தில் பேசிய அவர், வேறு கட்சிகளுக்கு வாக்களிக்க விருந்த பலர் பிரேமதாசாவின் அநியாயக் கொலையை அடுத்து ஐ.தே.க விற்கு அனுதாபம் தெரிவித்து வாக்குகளை அளிக்க இன்று முன் வந்துள்ளனர் என்றார்.

## இனப்பிரச்சினையை தீர்க்க வாக்களியுங்கள்

ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பேன் இதற்கான சக்தியைப் பெற நல்ல மனத்தெம்பு அவசியம் அதற்காக இம்முறை மாகாண சபை தேர்தலில் ஐ.தே.கவை வெற்றிபெறச் செய்யுங்கள் என ஜனாதிபதி விஜயதுங்கா வேண்டினார்.

யாப்பகுவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியஅவர் பாராளுமன்றம் மூலம் நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டேன். எல்லோரும் போட்டியை எதிர்பார்த்தனர். ஐ.தே கவுடன் போட்டியிட இந்நாட்டில் எந்தக் கட்சியும் இல்லை என்றார். நான் பதவி ஏற்று ஒரே இரவில் மக்களுக்குப் பல நிவாரணங்களை அளித்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

## அறிவிப்புக்கு வரவேற்பு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்காக புலிகளின் நிலையை அறிந்து வர தயாராக இருப்பதாக தமிழ் மூத்தோர் கல்விமான்கள் பேரவை தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காண வேண்டும் என்ற ஜனாதிபதி விஜயதுங்காவின் நிலைப்பாட்டை வரவேற்பதாகவும் இப்பேரவை குறிப்பிட்டுள்ளது.

## ஹமீத்தின் நம்பிக்கை

[கொழும்பு]

7 மாகாண சபைகளிலும் ஐ. தே. க நிச்சயம் வெற்றி பெறும் என நம்பிக்கை தெரிவித்துள்ளார் அமைச்சர் ஹமீத். ஆளும் கட்சி வெற்றி பெறுவதற்கு எட்டு காரணங்களையும் அவர் வெளியிட்டுள்ளார்.

## தாதிகள் தேர்வு

''பயிற்சிபெற்ற பெண்தாதிகளுக்கான நேர்முகத் தேர்வு'' இன்று காலை 9 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி ஆரம்ப பாடசாலைக்கு முன்பாக உள்ள மகளிர் அலுவலகத்தில் நடைபெறும்.

## இட மாற்றம்

பண்டத்தரிப்பு இந்து வாலிபர் சங்கத்தினது வாசிகசாலையும், நூல்நிலையமும் ஆனைக்கோட்டை மூத்தநயினார் சுவாமி கோவிலுக்கு சமீபமாகவுள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டு முன்பு போல இயங்கி வருகின்றது. (41)

## உதைபந்தாட்டம்

(தொல்புரம்)

சுழிபுரம் சத்தியா விளையாட்டுக் கழகம் நடாத்தும் 11பேர் கொண்ட அணிகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகள் நாளைசெவ்வாய்க்கிழமை பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இச்சுற்றுப்போட்டிகளில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:- பிற்பகல்3-30மணிக்கு காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் சில்வர்ஸ்டார் விளையாட்டுக்கழகம்.

மாலை 4-30 மணிக்கு பண்ணாலை கணேசன் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை அறிவொளி விளையாட்டுக்கழகம். (41)

## உதவிப்பணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு

எதேச்சதிகாரமான போக்கு இருக்காது என்றும், எதிர்க்கட்சியினரையும் அனுசரித்துச் செல்லும் போக்கே இருக்கும் எனவும் பலரால் எதிர்வு கூறப்பட்டது. ஆனால், பதவி ஏற்று இருவாரங்களுக்குள் ஜனாதிபதியின் பேச்சும், நடவடிக்கைகளும் கட்சிக்குள்ளும், வெளியிலும் எதிர்பார்த்ததிற்கு மாறாக, அதிகாரப் பிரயோகம் கொண்டதாகவும், கடும் போக்காகவும் உள்ளதையே காணக்கூடியதாக உள்ளது.

பதவி ஏற்ற அன்று முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் சேவையைப் புகழ்ந்து பாராட்டிய டி. பி. விஜயதுங்கா, இருவாரங்களுக்குள்ளாகவே ''முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைப்போன்றே நானும் மக்கள் மத்தியில் செல்வேன். ஆனால், நான் பிரேமதாசா அல்ல. எனது கையில் என்றும் இரத்தக்கறை படிந்தது கிடையாது'' எனத் தெரிவித்துள்ளார். டி. பி. விஜயதுங்காவின் இக்கூற்றானது வெளியில் உள்ள பலரும் குறிப்பிடுவது போன்று பிரேமதாசாவின் ஆட்சி ஓர் இரத்தக்கறை படிந்த ஆட்சி என்பதை ஏற்றுக் கொள்வதாகவே முடிகின்றது. இது தனக்கு ஜனாதிபதி பதவிக்கு வழி சமைத்துக் கொடுத்த பிரேமதாசா மீதான விசுவாசத்தைக் காட்டுவதாக இல்லை. பிறர் தலையில் பழியைப் போட்டுத் தப்பித்துக் கொள்ளும் 'ஓர் அரசியல்வாதி'யின் நடவடிக்கையைக் காட்டுவதாகவே உள்ளது.

இதற்கு ஏற்றால் போலவே, கட்சியினுள் தனது பிடியை இறுக்கிக் கொள்வதற்கு வாய்ப்பாக அமைச்சுக்களைப் பகிர்ந்தளிக்காமலும், அதேவேளை அரசாங்க உயர் பதவிகளிலும், கட்சிப்பதவிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் களை எடுப்பு நடவடிக்கைகளும், முயற்சிகளும் உள்ளன. இந்தவரிசையில், பிரேமதாசா வைத்திருந்த அமைச்சுப் பொறுப்புக்களைவிட கூடுதலான பொறுப்புக்களை டி. பி. விஜயதுங்கா கொண்டுள்ளார். இதன்மூலம், கட்சிக்குள் தம்மை சர்வாதிகாரியாக்க அவர் முற்பட்டுள்ளார்.

டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்றதும், மிகிந்தலையில் நடைபெறவிருந்த கிராமோதய நிகழ்ச்சியைக் கைவிட்டமையும், ஏயார் லங்கா நிறுவனப் பணிப்பாளர் சபையக் கலைத்தமையும், அவர் பிரேமதாசாவின் நடவடிக்கைக்கு எதிராக மேற்கொண்ட நடவடிக்கை மட்டுமல்ல, அரசியலில் குறிப்பாக ஐ. தே. கட்சி அரசியலில் பிரேமதாசாவின் வாரிசுகள் என எவரும் பெரியளவில் தலை எடுத்து தனது ஆட்சிக்கு முட்டுக்கட்டையாக எழக்கூடாது என்பதினாலேயே ஆகும்.

புதிய ஜனாதிபதியின் அதிகாரப் போக்கு மிக உச்சமாக வெளியிடப்பட்டுள்ளமை அவர் எதிர்க்கட்சிகளுக்கு, விடுத்துள்ள எச்சரிக்கையாகும். ''எமக்குப்பிரச்சினைகளை அல்லது சங்கடங்களை ஏற்படுத்தும் எதிர்க்கட்சியினரின் பிரதேசங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படமாட்டது'' என்பதே இந்த அச்சுறுத்தலாகும். இதனை அவர் எதிர்க்கட்சியினருக்கு என விடுத்திருந்தாலும், மக்களுக்கு விடுத்துள்ள எச்சரிக்கை என்றே கொள்ளவேண்டும். அதாவது மக்கள் எதிரணியினருக்கு வாக்களித்தால் உங்கள் பிரதேசத்திற்கு நிதி ஒதுக்கப்படமாட்டாது என்பதே இதுவாகும்.

இவ்வாறானதொரு எச்சரிக்கை முன்னாள் ஜனாதிபதிகள் ஜெயவர்த்தனா, பிரேமதாசா ஆகியோரால் கூடமக்களுக்கெதிராகவெளிபபடையாகவிட்டதாக இல்லை. இந்நிலையில், டி.பி.விஜயதுங்காவின் இவ் எச்சரிக்கை, தனிமனித குண நலன்களையும்மீறி ஜனாதிபதி நாற்காலியின் அதிகாரம் எவரையும் சர்வாதிகாரியாக மாற்றுகின்றது என்றே எண்ண வைக்கின்றது. இந்நிலையில், அரசியல் உறுதிப்பாடு என்பதைவிட தனிமனித சர்வாதிகாரத்திற்கே சிறிலங்கா ஆட்சி அமைப்பு வழி சமைக்கின்றது என்கூற்றின் மிகையில்லை.

## கண்காணிப்பாளரிடம் மு. காங்கிரஸ் முறையீடு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் தூதுக்குழு இலங்கை வந்துள்ள தேர்தல்கண்காணிப்பாளர்குழுவை ஹோட்டல் ஒபரோயில் சந்தித்து பேச்சு நடத்தியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்தது.

அரசின்கட்டுப்பாட்டிலுள்ள தமிழ் பத்திரிகை ஒன்றும் தனது கட்சி தொடர்பான செய்திகளை இருட்டடிப்பு செய்வதாகஅம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. அமைச்சர்களின் அபிலாசைகளுக்கு ஏற்பவே இந்த பாரபட்சம் கடைப்பிடிக்கப்படுவதாக அந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## ஜனாதிபதிமுறையை அழித்து அதன்பின் நியமனமாம்

### சிறிமாவோ சொல்கிறார்

(கொழும்பு)

''நான் மரணம் அடையும் வரை இந்தப்பதவியில்ஒட்டிக்கொண்டிருக்கப் போவதில்லை எனினும் நிறைவேற்று ஜனாதிபதிமுறையை நீக்கிவிட்டு பின் யாரிடமாவது எனது பதவியை ஒப்படைத்துவிட்டு வீட்டில் இருந்து தியானம் செய்வேன்.'' இவ்வாறு சிறிமாவோ பண்டாரநாயக்கா கண்டியில் நடந்த தேர்தல் கூட்டத்தில் தெரிவித்தார்.

ஏழு மாகாணசபைகளில்எதிரணியினர் 5 மாகாணசபைகளில் வெற்றி பெற்றால் அது இன்றைய ஐ.தே.க அரசை வீட்டிற்கு அனுப்பும் அறிகுறியாகும் என்றும் அவர்மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.க மூன்றாமிடத்திற்கு தள்ளப்பட்டுவிடும்

### லக்ஷ்மன் ஜெயக்கொடி கருத்து

[கொழும்பு]

மாகாணசபை தேர்தலில் ஐ.தே.க மூன்றாம்இடத்திற்கு தள்ளப்பட்டுவிடும். முதலிடத்தை சுதந்திரக் கட்சியும், இரண்டாவது இடத்தை ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியும் பெற்றுக்கொள்ளும் என சுதந்திரக்கட்சி எம்.பி. லக்ஷ்மன் ஜெயக்கொடி கூறினார்.

குருநாகலில் நடைபெற்ற பிரசாரக்கூட்டம் ஒன்றில் பேசிய அவர், ஜனசக்தி வலுவற்றது என்பது ஏற்கனவே நிருபணமாகிவிட்டது. ஆடை தொழிற்சாலைத்திட்டம் கூட தோல்வியடைந்து விட்டது. 150000 வேலை வாய்ப்புத்திட்டம் கேலிக்கூத்தாகி விட்டது. ஐ.தே. க. இனிமேலும் மக்களை ஏமாற்ற முடியாது என்றார்.

## அரசின் பொய்களை சிலர் நம்புகின்றனர்

### அனுரா குற்றச்சாட்டு

[கொழும்பு]

அத்துலத்முதலியை கொலை செய்தவர் தனது சொந்த அடையாள அட்டையைக் கொண்டு வந்திருப்பார் என்பதை எம்மால் நம்பமுடியுமா? கொலைகாரன் தனது சொந்த அடையாள அட்டையைத் தானா கொண்டு செல்வான்? இவ்வாறான சம்பவங்கள் எங்கே நடக்கின்றன? இவ்வாறு கேள்வி எழுப்பினார் அனுரா பண்டாரநாயக்கா.

அம்பாந்தோட்டையில் நடந்த தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசிய அவர் அரசு தனது தவறான நடத்தைகளை மூடி மறைப்பதற்காக தெரிவிக்கும் பொய்களை ஏமாறக்கூடிய சில மக்கள் நம்பிவிடுகின்றனர் என்றார்.

## 'பிக்கப்'பில் வந்தோரால் விடுதியில் கொள்ளை

(கொழும்பு)

சோதனையிட வந்திருப்பதாக கூறி பம்பலப்பிட்டியில் உள்ள விடுதி ஒன்றுக்குள் புகுந்த கோஷ்டி ஒன்று அங்கு தங்கியிருந்தவர்களிடமிருந்து ஆறுலட்சம் ரூபாவிற்கும் அதிகமான ரொக்கப்பணம் மற்றும் தங்க ஆபரணங்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இவர்கள் 'பிக்கப்' வாகனத்தில் போலித்துப்பாக்கிகளுடன் வந்ததாகவும், சோதனையிடப் போவதாக கூறி விடுதியிலிருந்தவர்களை அறையில் பூட்டிவிட்டு கொள்ளையடித்து சென்றதாகவும் கூறப்படுகிறது.

### சிப்பாய் மரணம்

(மட்டக்களப்பு)

சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவர் ஆற்றில் மூழ்கி மரணமானார்.

கடந்த 13-ம் திகதி காலை 10-30 மணியளவில் பழுகாமம் ஆற்றுப்பகுதியிலேயே நடைபெற்றது.

தேர்தலில் இந்நாட்டு மக்கள் கொல்லப்பட்ட தலைவருக்கு காட்டும் அனுதாபத்தை எதிர்பார்த்த வண்ணமுள்ளனர். இதனைக் கருத்திற் கொண்டு முஸ்லிம்கள் ஒரே அணியாக ஐ.தே.க.விற்கு வாக்களிக்க ... விருந்த பலர் பிரேமதாசாவின் அநியாயக் கொலையை அடுத்து ஐ.தே.கவிற்கு அனுதாபம் தெரிவித்து வாக்குகளை அளிக்க இன்று முன் வந்துள்ளனர் என்றார்.

## இனப்பிரச்சினையை தீர்க்க வாக்களியுங்கள்

### ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினையை விரைவில் தீர்த்து வைப்பேன் இதற்கான சக்தியைப் பெற நல்ல மனத்தெம்பு அவசியம் அதற்காக இம்முறை மாகாணசபை தேர்தலில் ஐ.தே.கவை வெற்றிபெறச் செய்யுங்கள் என ஜனாதிபதி விஜயதுங்கா வேண்டினார்.

யாப்பகுவாவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசியஅவர் பாராளுமன்றம் மூலம் நான் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டேன். எல்லோரும் போட்டியை எதிர்பார்த்தனர். ஐ.தேகவுடன் போட்டியிட இந்நாட்டில் எந்தக் கட்சியும் இல்லை என்றார். நான் பதவி ஏற்று ஒரே இரவில் மக்களுக்குப் பல நிவாரணங்களை அளித்துள்ளேன் என்றும் அவர் கூறினார்.

## ஐ. தே. க.விற்கே மக்கள் வாக்களிப்பர்

### பிரதமர் ரணில் நம்பிக்கை

மக்கள் ஐ. தே. கவிற்கே வாக்களிப்பர் என்பது கூட்டங்களில் அவர்கள் திரளாக கலந்துகொள்வதில் தெரிகிறது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறினார்.

ஜாஎலவில் நடந்தஐ. தே.க கூட்டத்தில் பேசிய பிரதமர் மறைந்த பிரேமதாசாவின் இறுதி ஊர்வலம் எவ்வளவு அமைதியாக நடைபெற்றது என்பதையும் லலித்தின்இறுதி ஊர்வலத்தில் வன்முறைகட்டவிழ்க்கப்பட்டுபொதுமக்களினதும் அரசினதும் உடைமைகள் எவ்வளவுசேதமாக்கப்பட்டது என்பதையும் மக்கள் நன்கு அறிவர் எனக் குறிப்பிட்டார். அறிவுள்ள மக்களின் தீர்ப்பை திங்கள் (இன்று) அறிய முடியும் என்றும் ரணில் தெரிவித்தார்.

## வாக்காளர்களிடையே திணறும் வேட்பாளர்கள்

(கொழும்பு)

மலையகத்தில் வாக்காளர்களிடம் ஆதரவு தேடிச் செல்லும் வேட்பாளர்கள் அவர்களின்வசைப் பேச்சுக்களுக்கு முகம் கொடுக்கமுடியாதுதிணறுகின்றனர். அதேசமயம் சில தோட்டத் தொழிலாளர்கள் அபேட்சகர்களை தலைதெறிக்க விரட்டியடித்த சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஒரு தோட்டத்தில் மக்கள் மத்தியில் பேசப்போன வேட்பாளர் ஒருவரிடம் நீங்கள் ஒன்றும் பேசவேண்டாம் மரியாதையாகபோய்விடுங்கள்போதும்எனக் கூறி 'மரியாதையாக' அனுப்பிவைத்தனர். 'மக்களின் சில கேள்விகளுக்கு விடைகூற முடியாது வேட்பாளர்கள் முழிப்பதையும் காணமுடிகின்றது. மஸ்கெலியா, சாமிமலை பகுதிகளிலேயே இச்சம்பவங்கள் அதிகமாக இடம்பெறுகின்றன.

## பிரேமாவின் கிராம எழுச்சி குறைந்த செலவில் தொடரும்

அமைச்சரவையை விரைவில் மாற்றியமைக்கும் உத்தேசமில்லை என ஜனாதிபதி விஜயதுங்கா தெரிவித்துள்ளார். இதேசமயம் காலஞ்சென்ற பிரேமதாசாவின் கிராம எழுச்சித்திட்டத்தை குறைந்த செலவுடன் தொடர்ந்து முன்னெடுக்க உள்ளதாகவும் விஜயதுங்கா தெரிவித்தார். நாட்டின் நிர்வாக அமைப்பில் மறுசீரமைப்பு செய்யவுள்ளதாக புதிய ஜனாதிபதி மேலும்தெரிவித்தார்.

## விஜயதுங்காவை சந்திக்க விசேட கருமபீடம்

(கொழும்பு)

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவை பொதுமக்கள் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து சந்திக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதற்கென அங்கு விசேடகருமபீடம் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை ஏழுமணிமுதல் செயற்பட்டு வரும். இவ்விசேட கருமபீடத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் ஜனாதிபதியை பொதுமக்கள் சந்திக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

டச்சுற்றுப்போட்டிகள் நாளைசெவ்வாய்க்கிழமை பிற்பகல் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இச்சுற்றுப்போட்டிகளில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:- பிற்பகல்3-30மணிக்கு காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் மானிப்பாய் சில்வர்ஸ்டார் விளையாட்டுக்கழகம்.

மாலை 4-30 மணிக்கு பன்னாலை கணேசன் விளையாட்டுக் கழகம் எதிர் ஆனைக்கோட்டை அறிவொளி விளையாட்டுக்கழகம். (41)

### உதவிப்பணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

வேலணை, ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு உட்பட்ட பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவோருக்கான ஜனவரி மாத கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அத்துடன் காசநோய், புற்றுநோய் என்பவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவு தொகையும் அந்தந்த பகுதி கிராமசேவையாளர்களின் மூலம் வழங்கப்படுகின்றன. (22)

## தமிழ் விழா

(யாழ்ப்பாணம்)

தனிநாயகம் தமிழ் மன்றத்தின் தமிழ்விழா எதிர்வரும் 30ஆம்திகதி கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் குருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. யாழ். பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் தமிழ்ப்பேராசிரியர் திரு. கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளும் இவ்விழாவில் பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

### விளையாட்டு

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்படும் கழகங்களுக்கிடையே யானமட்டுப்படுத்தப்பட்ட 50 ஓவர்கள் கொண்ட டொனால்ட் கிண்ணப் போட்டிகள் தற்போது அரை இறுதியாட்ட நிலைக்கு வந்துள்ளன.

22. 05. 93 சனிக்கிழமை நடைபெற உள்ள முதலாவது அரை இறுதி ஆட்டத்தில் மானிப்பாய்பரிஷ்விளையாட்டு அணியை எதிர்த்து சென்றலைட்ஸ்(சொக்ஸ்)அணி மோத உள்ளது.

23.05.93ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள இரண்டாவது அரை இறுதி ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக அணியை எதிர்த்து சப்றா விளையாட்டுக்கழகம் மோத உள்ளது.

இவ் இரு போட்டிகளிலும் வெற்றியீட்டும் அணிகள் 30.05.93இல் இறுதிப் போட்டியில் மோத உள்ளன. இப் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். [17]

ஈழநாதம்

# ஜெயலலிதா அமைச்சரவை நேற்று திடீர் மாற்றம்

## மூன்றுபேர் அமைச்சரவையிலிருந்து நீக்கம்

[சென்னை]

தமிழ்நாட்டில் முதல்வர் ஜெயலலிதா தனது அமைச்சரவையை நேற்று மாற்றி அமைத்துள்ளார். தமிழ் நாட்டில் ஜெயலலிதா தலைமையிலான அ. இ. அ. தி. மு. க அரசு பொறுப்பேற்ற பின்னர் பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது அமைச்சரவை மாற்றம் இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த மாற்றத்தின்விளைவாக கல்வி அமைச்சர் செ. அரங்கநாயகம் உள்ளூராட்சி அமைச்சர் அழகு. திருநாவுக்கரசு, உணவுக் கூட்டுறவுத் துறை அமைச்சர் ஜி. விசுவநாதன் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள் இராம வீரப்பன், பட்டாபிராமன், கே. பொன்னுச்சாமி உட்பட பன்னிரண்டு பேர் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர். புதிய அமைச்சர்கள் இன்று பிற்பகல் ஐந்து மணியளவில் ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

தற்போது அமைச்சரவையில் சேர்க்கப்பட்டிருக்கும் இராம வீரப்பனுக்கு உணவு மற்றும் சிவில் சப்ளைத்துறையும், துரை இராமசாமிக்கு சிறுதொழில் வளர்ச்சித்துறையும், டி ஜனார்த்தனுக்கு பால் மற்றும் கால்நடைத் துறையும், சத்திய மூர்த்திக்கு வர்த்தக வரித்துறையும், ஜி. சின்னச்சாமிக்கு சுரங்கம் மற்றும் கனிமத்துறையும், எம். தென்னவனுக்கு செய்தி விளம்பரத்துறையும், பேராசிரியர் பொன்னுச்சாமிக்கு கல்வி மற்றும் தமிழ் வளர்ச்சித்துறையும் கே. லாறன்சுக்கு வனத்துறையும், மேலும் பரமசிவத்துக்கு தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு, பயிற்சித் துறையும், கே. பி. பட்டாபிராமனுக்கு கூட்டுறவுத் துறையும் டி. பி. நடேசன் பால்ராஜ்க்கு இந்து அறநிலையத் துறையும், பி. ஈஸ்வரமூர்த்திக்கு நகர் மற்றும் கிராமிய வளர்ச்சித்துறையும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்று பி. ப. 5.00 மணியளவில் ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் பதவியேற்பு வைபவம் நிகழும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெயலலிதாவின் பாதுகாப்பு

## தேசிய பாதுகாப்பு படையை விலக்கியது கவலையாம்

(சென்னை)

தமிழக முதல்வர் ஜெயலலிதாவிற்கு பாதுகாப்பளித்து வந்த தேசிய பாதுகாப்பு படையினரைத் திருப்பி அனுப்பும்படி மத்திய அரசு தமிழக அரசைக் கேட்டுக் கொண்டிருப்பது தமிழக மக்களுக்கு வேதனை தருவதாகும் என்று தமிழக அமைச்சர் செ. அரங்கநாயகம் கூறியுள்ளார்.

கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் கூறுகையில், தேசிய பாதுகாப்புபடையின் பாதுகாப்பு விலக்கப்பட்டதால்தான் முன்னாள் பிரதமர் ராஜீவ் கொல்லப்பட்டார் என்று கூறும் காங்கிரஸ்காரர்கள் அதிகம் பாதுகாப்பு தர வேண்டிய தமிழக முதல்வருக்கு பாதுகாப்பை மீளப்பெறுவது பொருத்தமானதல்ல என்றும் சுட்டிக்காட்டினார்.

## கோவா மாநில முதல்வர் பதவி விலகினார்

(டில்லி)

கோவா மாநில முதலமைச்சர் ரவிநாயக் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். பம்பாய் உயர் நீதிமன்றத்தின் கோவா பெஞ்ச் அளித்த தீர்ப்பொன்றை அடுத்து கோவா ஆளுநர் பானுபிரதாப் சிங் முதல்வரை பதவி விலகுமாறு கோரியிருந்தது குறிப்பிடத் தக்கது. ரவிநாயக் அமைச்சரவை கடந்த இருபத்தெட்டு மாதகாலமாகப் பதவியிலிருந்த போதும் ரவிநாயக்கும் அவரது சகாக்களும் கட்சி மாறல் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் பதவி இழந்துவிட்டதாக சபாநாயகர் அளித்த தீர்ப்பை பம்பாய் உயர் நீதிமன்றமும் ஊர்ஜிதப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் மோதலில் 500 பேர் பலி; 2500பேர் காயம்

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலையடுத்து ஈரான் ஆதரவுப்படைகள் வசம் இருக்கும் பகுதிகள் மீது அரசுப் படைகளின் ஜெட்விமானங்கள் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதலை ... படுகிறது.

போராளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் முகமாக அரசுப் படைகள் தலைநகரில் போர்த் தாங்கிகள், மற்றும் கவச வாகனங்கள் எல்பவற்றைக் குவித்து வருவதாகவும், ...

## தந்தை கடத்தினார்

குடும்பத்தகராறு காரணமாக, மனைவியையும், பிள்ளையையும், பிரிந்து வாழ்ந்து வந்த குடும்பஸ்தர் ஒருவர், வைத்தியசாலையில், குழந்தைப் பிள்ளைகள் வார்ட்டில், அனுமதிக்கப்பட்டிருந்த தனது ஒன்றரை வயது ஆண் பிள்ளையை, கடத்திக் கொண்டு தலைமறைவாகினார்.

இச் சம்பவம், கடந்த வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் மந்திகை அரசினர் வைத்தியசாலையில் இடம்பெற்றது. கரவெட்டி மேற்கில் வசிக்கும் தியாகராசா சஞ்சீவன் என்னும் ஆண் குழந்தையே, இவ்விதம் கடத்தப்பட்ட வராவார். இது பற்றி, பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி, பருத்தித்துறை காவல்துறையில் புகாரிட்டுள்ளார்.

(30,யோ)

## காற்றுப் புகாத அறையில் அடைத்து வைத்து 'ராக்கிங்'

(கொழும்பு)

தங்காலை ஆஸ்பத்திரியில் மரணமான அங்குள கோலபெலசு விவசாய பாடசாலை மாணவர் நிரோசனா புஞ்சஹேவாவின் (வயது 20) மரணம் தொடர்பாக அதே பாடசாலையைச் சேர்ந்த 2ஆம் வருட மாணவரும் மற்றும் 28 பேரும் கைது செய்யப்பட்டனர்.

1993 மார்ச் முதலாம் திகதி அனுமதி பெற்ற புதிய மாணவரான நிரோசனா சிரேஷ்ட மாணவர்களால் ராக்கிங்செய்யப்பட்டதன் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுக் காலமானார்.

சிரேஷ்டமாணவர்கள் காலமானவரையும், வேறுபலபுதிய மாணவர்களையும் காற்றுப் புகாத அறையொன்றில் அடைத்து வைத்ததைத் தொடர்ந்தே இந்தச் சம்பவம் ஏற்பட்டது

தன்னையும்மற்றும்பலபுதிய மாணவர்களையும் காற்றுப் புகாதஅறையொன்றில் அடைத்து வைத்தது காரணமாக தனக்குச் சுவாசிக்க முடியாதிருப்பதாக காலமானவர் தன் மரணத்தின் முன் பெற்றோருக்குத் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் ராக்கிங் செய்யப்பட்ட மாணவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதுவிவசாயப் பாடசாலை அதிபருக்கு அறிவிக்கப்பட்ட பின்னரும் அவரது கட்டுப்பாட்டை மீறிப் பாடசாலையில் ராக்கிங் நடைபெற்றுள்ளது

புஞ்சிஹேவா நிரோசனாவின் மரணம் கொலை என ஹம்பாந்தோட்டை நீதிபதி தீர்ப்பளித்தார். ராக்கிங் செய்ததாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுக் கடந்த திங்களன்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டவர்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை போராளிகள்

## ஊடுருவலை தடுக்க சிவகங்கை அருகே முகாம்

கடல் வழியாக தமிழ் நாட்டினுள் இலங்கைப் போராளி... ...ரால கண்காணிக்கப்பட்டு வருகிறது.

# தீவிரவாதிகளுக்கு உதவி; பாக். கைவிட வேண்டும்

## அமெரிக்கா வற்புறுத்து

(இஸ்லாமாபாத்)

பஞ்சாப், மற்றும் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு ஆதரவு தரும் செயலை பாக்கிஸ்தான் முற்றாக நிறுத்தவேண்டும் என்றே அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் விரும்புவதாக வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

ஜோன் மல்லர் என்னும் அவ் அதிகாரி மேலும் கூறுகையில், வன்முறைக்கு முடிவு கட்டுவதையே அமெரிக்கா விரும்புவதாகவும் இதுசம்பந்தமாக இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு பாகிஸ்தானிடமே இருப்பதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் காஷ்மீர் பகுதியில் இருக்கும் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டை இரு நாடுகளும் மதித்து நடக்க வேண்டும் எனவும், சிம்லா ஒப்பந்தத்தின் அடிப்படையில் இரு நாடுகளும் பேச்சு நடத்தித் தீர்வு காண வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## அதிபர்களுக்கான கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவ உணவு முத்திரை. தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு பற்றி கலந்துரையாட பின்வரும் திகதிகளில் சகல அதிபர்களும் தவறாது வருகை தரும்படி கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுள்ளனர்.

பண்டத்தரிப்புகல்விக் கோட்டம் இன்று முற்பகல் 9மணிக்கு யா/மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும். வடமராட்சிக் கல்விக் கோட்டம் இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யா/வேலாயுதம் மகாவித்தியாலத்திற்கும், யாழ். கல்விக் கோட்டம் நாளை மு. ப 10 மணிக்கு யா/இந்து மகளிர்கல்லூரி.

## அவசர நோயாளருக்கு உடன் சிகிச்சை

யாழ். போதனா வைத்தியசாலையில், நோயாளர்கள், வெளிநோயாளர் பிரிவில் முதலில் பார்வையிடப்பட்டு. அவசரமாயின் உடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அல்லது வார்ட்டில் அனுமதிக்கப் படுகிறார்கள். ஏனையோர் கிளினிக்கிற்கு அனுப்பப்படுகிறார்கள். அங்கு குறுகியகால இடைவெளியில் திகதி கொடுக்கப்பட்டு பின்னர் அத்திகதியில் நோயாளர் பார்வையிடப்படுவார்கள் இந்த அடிப்படையே சரும நோயாளர் சம்பந்தமாகவும்பின்பற்றப்படுவதாகவைத்தியசாலை வட்டாரங்கள் தெரியப்படுத்துகின்றன.

கடந்த வெள்ளி மஞ்சரியில் சரும நோயாளருக்கு கிளினிக்கிற்கான திகதி வழங்குவது குறித்து வெளிவந்த குறிப்பு வைத்தியர்களின் மனதைப் புண்படுத்தியிருந்தால், அதற்காக வருந்துகிறோம்.

## மத். அமைச்சா? மாகாண சபையா?

# யாருடைய பணிப்பை ஏற்பது கல்வித்திணைக்களம் தடுமாற்றம்

(மட்டக்களப்பு)

மத்தியஅரசின்கல்விச்சேவை குழுவின் பணிப்புரையை ஏற்பதா அல்லது மாகாண கல்வி அமைச்சின் பணிப்புரையை ஏற்பதா என்ற இக்கட்டான நிலை மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திற்கும் ஏற்பட்டுள்ளது

தொண்டர் ஆசிரிய நியமனம் கிடைக்காதோர்கல்வி அமைச்சின் இடம்பெயர் சேவையில் மேன்முறையீடு செய்தனர். இவ்விதம் முறையீடு செய்த 338 பேரின் பட்டியலை கல்விச்சேவைக்குழு மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளது. இந்தப்பட்டியலில் உள்ளவர்களின் விண்ணப்பங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்விப்பணிப்பாளர் கோரப்பட்டுள்ளார்.

இதேசமயம் விசாரணை மேற்கொள்ள வேண்டாமென வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த இழுபறிநிலையினால் மேன்முறையீடு செய்த தொண்டர் ஆசிரியர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனராம்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான சி டி.பட்டியல்களில் இல்லாத பலரின் பெயர்களும் மேற்படி 338 பேர் கொண்ட பட்டியலில் உள்ளதாம்.

தேர்தல்

இதனால் உடன் நடவடிக்கை எடுக்க முடிந்ததாகவும் குறிப்பிட்டார்.

## ஐ.தே.கவுடன் முற்றாக நாம் இணைந்து விடவில்லை

முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

நாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கைப்பாவையாகச் செயல்படவில்லை. என மக்களுக்கு எடுத்துக்காட்டவே ... வையும் முன்வைக்கவில்லை.

ஐக்கியதேசியக் கட்சியுடன் நாம் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளில் இணைந்து செயற் ...

## பதவி விலகினார்

(டில்லி)

கோவா மாநில முதலமைச்சர் ரவிநாயக் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். பம்பாய் உயர் நீதிமன்றத்தின் கோவா பெஞ்ச் அளித்த தீர்ப்பொன்றை அடுத்து கோவா ஆளுநர் பானுபிரதாப் சிங் முதல்வரை பதவி விலகுமாறு கோரியிருந்தது குறிப்பிடத் தக்கது. ரவிநாயக் அமைச்சரவை கடந்த இருபத்தெட்டு மாதகாலமாகப் பதவியிலிருந்த போதும் ரவிநாயக்கும் அவரது சகாக்களும் கட்சி மாறல் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர் பதவி இழந்து விட்டதாக சபாநாயகர் அளித்த தீர்ப்பை பம்பாய் உயர் நீதிமன்றமும் ஊர்ஜிதப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் மோதலில் 500 பேர் பலி; 2500பேர் காயம்

(காபூல்)

ஆப்கான் தலைநகர் காபூலையடுத்து ஈரான் ஆதரவுப்படைகள் வசம் இருக்கும பகுதிகள் மீது அரசுப் படைகளின் ஜெட் விமானங்கள் நேற்று குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளன. கடந்தநான்கு நாட்களுக்கும் மேலாக நடைபெற்றுவரும் தொடர் சண்டைகளால் ஐந்நூறுக்கும் அதிகமானோர் உயிரிழந்திருப்பதாகவும் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கும் அதிகமானோர் காயமடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

போராளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும் முகமாக அரசுப் படைகள் தலைநகரில் போர்த் தாங்கிகள், மற்றும் கவச வாகனங்கள் என்பவற்றைக் குவித்து வருவதாகவும், உடனடியாகப் போர் நிறுத்தம் ஏற்படவில்லையாயின் பெரும்போர் இடம்பெறலாம் எனவும் காபூலில் இருக்கும் வெளிநாட்டு இராஜதந்திரிகளை மேற்கோள் காட்டி ஏஜென்சிச் செய்திகள் கூறியுள்ளது:

## நன்றி நவிலல்

12-05-93 அன்று நடைபெற்ற அருட்திரு. ஆபரணம் சிங்கராயரின் (அ. ம. தி.) இறுதி யாத்திரையில் பங்குபற்றிய குருக்கள், கன்னியர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ காவல்துறையினர், முன்னாள் பாலம் பணிமனை நிர்வாகிகள், ஊழியர்கள், உற்றார், உறவினர் நண்பர்கள், பொதுமக்களுக்கும் தமது அனுதாபங்களைத் தெரிவித்த ஏனைய அனைவருக்கும் எமது இதயங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:

22/1, சென்பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

சகோதரர்கள்,
சகோதரி

[4895]

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 16-05-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 9469

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

24-6533, 26-3473, 27-7081, 24-8364, 41-9659
22-9257, 43-1857, 42-1623, 27-4239, 41-9652
24-3906, 27-5912, 42-3854, 28-940, 27-4162,

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4323, 24-8353, 27-0991, 24-4261 26-4568
26-9755, 26-1791, 24-9676, 27-9033 26-7187
26-1285, 41-8068, 26-2422, 27-6063 24-6489
42-2432, 24-4238, 41-5605

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993 -ம் ஆண்டு மே மாதம் 17 -ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

...யும், மேலும் பரமசிவத்துக்கு தொழிலாளர் நலம் மற்றும் வேலை வாய்ப்பு, பயிற்சித் துறையும், கே. பி. பட்டாபி ராமனுக்கு கூட்டுறவுத் துறையும் டி. பி. நடேசன் பால்ராஜ்க்கு இந்து அறநிலையத் துறையும், பி. ஈஸ்வரமூர்த்திக்கு நகர் மற்றும் கிராமிய வளர்ச்சித்துறையும் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஆளுநர் மாளிகை வட்டாரங்கள் கூறியுள்ளன. இன்று பி. ப. 5.00 மணியளவில் ஆளுநர் மாளிகையான ராஜ்பவனில் பதவியேற்பு வைபவம் நிகழும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

...புகாத அறையொன்றில் அடைத்து வைத்ததைத் தொடர்ந்தே இந்தச் சம்பவம் ஏற்பட்டது

தன்னையும்மற்றும்பலபுதிய மாணவர்களையும் காற்றுப்புகாதஅறையொன்றில் அடைத்து வைத்தது காரணமாக தனக்குச் சுவாசிக்க முடியாதிருப்பதாக காலமானவர் தன் மரணத்தின் முன் பெற்றோருக்குத் தெரிவித்துள்ளார்.

பாடசாலையில் ராக்கிங் செய்யப்பட்ட மாணவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதுவிவசாயப் பாடசாலை அதிபருக்கு அறிவிக்கப்பட்ட

## இலங்கை போராளிகள் ஊடுருவலை தடுக்க சிவகங்கை அருகே முகாம்

கடல் வழியாக தமிழ் நாட்டினுள் இலங்கைப் போராளிகள் ஊடுருவுவதை தடுக்க சிவகங்கைக்கு கிழக்கே 70 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள துண்டியில் பொலிஸ் முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து தேவகோட்டை வரையான பகுதி பொலிசால கண்காணிக்கப்பட்டு வருகிறது.

இதேசமயம் மாதமிருமுறை பாதுகாப்பு அதிகாரிகளின் மாநாடும் இப்பகுதியில் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

### யாழ். மாவட்ட

அனுமதிக்கப்பட்டவர்களில் அடங்குவர்.

இதேவேளை நோய்களின் காரணமாக மரணமடைந்தவர்களில் ஆகக்கூடுதலானோர் செப்டசீமியா (குருதி அழுகல்] நோயினாலேயே மரணமடைந்துள்ளனர். மற்றும் இருதய நோயினால் 94 பேர் மரணமடைந்துள்ளனர். மந்த போசாக்கு உள்ள குழந்தைகள் 87, நுரையீரல் வருத்தத்தினால் 81, குடல்வருத்தத்தினால் 78, மூளைஇரத்தக் கசிவினால் 53, மூளைக் காய்ச்சலினால் 53. பிறப்பின்போது மூச்சுத் திணறலினால் 39, சமிபாட்டுத் தொகுதியில் ஏற்பட்ட நோயினால் 36 பேர் மரணமடைந்ததாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1991ஆம் ஆண்டை விட 1992 இல் பல்வேறு நோய்களினாலும் மரணமடைந்தோரின் தொகை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதில் பொதுவாக குருதி அழுகல் நோயினால் 1991இல் 191 பேரே இறந்துள்ளனர். ஆனால் 1992 இல் 248 பேர் மரணமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் மருந்துகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடே இம் மரண அதிகரிப்புகளுக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

சில நோய்களின்மரணவீதங்கள் குறைவடைந்துள்ள போதும் ஒப்பீட்டு ரீதியாக நோக்கும்போது நோய்களின் அதிகரிப்பினால் மரண வீதங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### எறிகணை

டுக் கரை சேர்ந்தனர்.

மேலும் நேற்றுமுன்தினம் காலை நடந்த கலிபர். எறிகணைத் தாக்குதலின்போது மார்க்கண்டு அம்பிகாபதி (வயது 50) என்பவர் தொழிலில் ஈடுபட்டிருந்தவேளை எறிகணைச் சிதறல் அவரது இடது காலில் கீழ்ப்பகுதியில் தாக்கியதால் காயமுற்றார். இவர் பொன்னாலை குடியேற்றத்திட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து தொல்புரம் மத்தியில் வசித்துவருபவர் என்பது குறிப்பிடத்தக்கது (41)

### பலத்த

தின் மூலம் உருவாக்கப்பட்ட இம்மாகாண சபைகளுக்கான முதலாவது தேர்தல்கள் 1988 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இடம்பெற்றது. இன்றைய மாகாணசபைத்தேர்தல்களில் 9 அரசியல் கட்சிகளும்' 10 சுயேட்சைக் குழுக்களும் போட்டியிடுகின்றன.

முதலாவது தேர்தல்முடிவு நாளை அதிகாலை 2.30 மணியளவில் அறிவிக்கக்கூடியதாக இருக்குமெனத்தேர்தல்ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதும் அதனை அறிவிக்கவென ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் ஒளிபரப்புநாளை நீடிக்கப்பட்டுள்ளது

மாவட்ட மட்டத்தில் 1058 வாக்குகளை எண்ணும் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன

### வாக்குகளா?

ஆவலுடன் உள்ளனர். ஆயுத பலத்தினால் இன்று நாடு குட்டிச் சுவராகிவிட்டது. மக்களின் பலத்தைக் கொண்டே நாம் எமது செயற்பாடுகளை செய்ய முற்பட வேண்டும் என்றார்.

## கல்வித்திணைக்களம் தடுமாற்றம்

(மட்டக்களப்பு)

மத்தியஅரசின்கல்விச்சேவை குழுவின் பணிப்புரையை ஏற்பதா அல்லது மாகாண கல்வி அமைச்சின் பணிப்புரையை ஏற்பதா என்ற இக்கட்டான நிலை மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்திற்கும் ஏற்பட்டுள்ளது

தொண்டர் ஆசிரிய நியமனம் கிடைக்காதோர்கல்வி அமைச்சின் இடம்பெயர் சேவையில் மேன்முறையீடு செய்தனர். இவ்விதம் முறையீடு செய்த 338 பேரின் பட்டியலை கல்விச்சேவைக்குழு மட்டக்களப்பு கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைத்துள்ளது. இந்தப்பட்டியலில் உள்ளவர்களின் விண்ணப்பங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கல்விப்பணிப்பாளர் கோரப்பட்டுள்ளார்.

இதேசமயம் விசாரணை மேற்கொள்ள வேண்டாமென வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர் கல்விப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டுள்ளார். இந்த இழுபறிநிலையினால் மேன்முறையீடு செய்த தொண்டர் ஆசிரியர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனராம்.

தொண்டர் ஆசிரியர்களுக்கான சி டி.பட்டியல்களில்இல்லாத பலரின் பெயர்களும் மேற்படி 338 பேர் கொண்ட பட்டியலில் உள்ளதாம்.

### தேர்தல்

இதனால் உடன் நடவடிக்கை எடுக்க முடிந்ததாகவும் குறிப்பிட்டார்,

மாகாணசபைத் தேர்தலின் போது சுமார் எழுபது சதவிகிதத்திற்கும் அதிகமானோர் வாக்களிப்பதில் ஈடுபடுவர் என்றும் தேர்தல் ஆணையாளர் நம்பிக்கை தெரிவித்தார்.

### நிபந்தனையற்ற

மாகாண சபைத் தேர்தலுக்கும், நாம் விடுத்துள்ள சமாதான அறைகூவலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறமுடியாவிட்டாலும், இப்போதுள்ள சூழ்நிலை சமாதான முயற்சிக்கு வழிவகுக்கும் என்ற நோக்கத்தோடு தான் இந்த அறைகூவலை வழக்கம் போல இம்முறையும் விடுத்துள்ளோம் என்றார்.

இதேவேளை பரீஸிலுள்ள சர்வதேச செயலகத்தில் இருந்து தொலைபேசியில் அளிக்கப்பட்ட பேட்டியில், சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தை இலங்கைக்கு வெளியிலேயே நடத்தப்படவேண்டும் எனத் தெரிவித்ததாக பி.பி.ஸி. மேலும் அறிவித்தது.

### இலவச

உலர் உணவு விநியோகம் விரைவில் மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் உலர் உணவுப் பொருள்கள் இன்று தொடக்கம் களஞ்சியத்திலிருந்து சம்பந்தப்பட்ட ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே 1993 சித்திரை முதல் இருவாரத்திற்கான இலவச உலர் உணவு விநியோகத்தினை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் வழங்கி முடிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளைச் செய்து விநியோகம் சீராக நடைபெறுவதை உறுதி செய்யுமாறும் இதில் ஏதாவது தடங்கல்கள் இருப்பின் உடனடியாக தம்முடன் தொடர்பு கொள்ளுமாறும்திட்டப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

## ஐ.தே.கவுடன் முற்றாக நாம் இணைந்து விடவில்லை

முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

நாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கைப்பாவையாகச் செயல்படவில்லை. என மக்களுக்கு எடுத்துக்காட்டவே முயன்று வருகிறோம் என முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு நாம் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்பாடு எதனையும் செய்யவில்லை. வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கான தீர்வில் அக்கறை செலுத்தாமையினாலேயே இன்றுவரை ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது சிறிலங்கா சுதந்திரக்கட்சியோ ஒரு தீர்வையும் முன்வைக்கவில்லை.

ஐக்கியதேசியக் கட்சியுடன் நாம் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளில் இணைந்து செயற்பட்டோமே தவிர முற்றுமுழுதாக கட்சியுடன் எல்லா விடயங்களிலும் இணைந்து விடவில்லை என மேலும் அவர் தெரிவித்தார்.

### கதவுகள்

றனர். சிலர் வரவேற்கின்றனர் என்றார்.

பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கவேண்டும். ஆனால் தம்மால் அரசை ஆக்கவோ அழிக்கவோ முடியும் என நினைக்கக் கூடாது என்றும் ஜனாதிபதிவிஜயதுங்க மேலும் தெரிவித்தார்.

### பாஸ்கரலிங்கத்தின்

மேலும் பிரேமதாசாவின் திட்டங்கள் பலவற்றிலும் மாற்றங்களை டி. பி விஜயதுங்க மேற்கொண்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் செய்தி வெளியீட்டு நிறுவனங்களில் பல மாறுதல்கள் தற்போது இடம்பெற்றுள்ளன. சிலுமின பத்திரிகையில் எழுதிவந்த பல கட்டுரையாளர்கள் தமது ஆக்கங்களை நிறுத்தியுள்ளனர் வானொலி ரூபவாகினியில் ஒசி அபயகுணசேகராவினதும் பிரேமதாசாவின் துதிபாடும் நிகழ்ச்சிகளும் இருந்த இடம் தெரியாது ஒழிக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

### தேர்தலின்

யிருக்கும் சம்பள அதிகரிப்பினை முன்னரே வழங்கியிருக்க முடியும் என சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜயதுங்க தெரிவித்ததாகவும் லக்திவ ஆசிரியர் மேலும் குறிப்பிட்டார்.

## கலிபர் தாக்கு

[தென்மராட்சி]

கிளாலிக் கடற்கரையை நோக்கி கடலில் இருந்து விசைப்படகில் வந்த கடற்படையினர் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 15க்கு கடும் [50] கலிபர் தாக்குதலை நடத்தினர். இதேவேளை பூநகரி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து பராவெளிச்சமும்பாய்ச்சப்பட்டது. இடைக்கிடை பீரங்கித் தாக்குதல்களும் கேட்ட வண்ணம் இருந்தது. (86]

## பொலிஸ் நிலையம்

காங்கேசன்துறையில் சிறிலங்கா பொலிஸ் நிலையம் ஒன்று கடந்த திங்களன்று திறக்கப்பட்டது. முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திருநாவுக்கரசின் வீட்டில் இப்பொலிஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இப்பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் சப்இன்ஸ்பெக்டர் மற்றும் 12 பொலிசார் பணியாற்றுகின்றனர்.

### ஜனாதிபதியின்

லான அதிரடிப்பொலிசாரிடம் பாதுகாப்பு ஒப்படைக்கப்பட்டது. ரவி ஜெயவர்த்தனா முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.

### பிரேமதாசா

குற்றப் புலனாய்வு பிரிவினரிடமிருந்து இரகசியப் பொலிசாரிடம் ஜனாதிபதி டி. பி. விஜயதுங்கவின் பணிப்பின் பேரில் ஒப்படைக்கப்பட்டமை தெரிந்ததே.